[பகுதி 2

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாரண ௵ வைகாசி ௴
MAY 1944

"முயற்சி திருவினை யாக்கும்"

பிரசுர கர்த்தர்கள்:

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை:
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. 34-வது மாகாணக் கல்வி மகாநாடு .... .... 25
—ஸர். என். கோபாலசாமி அய்யங்கார் தலைமைப் பிரசங்கம்

2. மௌன வாசிப்பு ... ... ... .... 29
—M. K. சிவராமன்

3. ஆரம்ப வகுப்புகளில் கதை சொல்வதெப்படி? .... 34
—ஜி. வி. நடராஜன், கொலப்பலூர்

4. 34-வது மாகாணக் கல்வி மகாநாடு (நடவடிக்கைகள்) ... 37

5. செய்தித் திரட்டு .... .... .... 41

6. பத்திராதிபர் குறிப்புகள் ... .... ..... 49


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. மூலம் சந்தா தொகை வசூலிக்கப்பட நேரிடும். வி. பி. அனுப்புவதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால், சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவிடும்படி நேயர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1944 மே மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 45.
வடஆற்காடு — N. A. 35, 45.
தென்னாற்காடு — S. A. 30-A, 81.
தஞ்சாவூர் — Tan. 2, 8, 40, 50-A, 77.
திருச்சி — Tri. 2.
ராமனாதபுரம் — Rd. 56, 64.
மதுரை — Md. 2, 23, 83.
சேலம் — S. 5, 17, 56.
கோயமுத்தூர் — Co. 2, 8, 9, 13, 38.

முக்கிய கவனிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.

# பாலர் கல்வி

| தொகுதி 9 | 1944 ௵ மே ௴<br>தாரண ௵ வைகாசி ௴ | பகுதி 2 |
|---|---|---|

## 34-வது மாகாணக் கல்வி மகாநாடு*

### ஸர். என். கோபாலசாமி அய்யங்கார் தலைமைப் பிரசங்கம்

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கல்வித்திட்டத்தை எப்படி மாற்றியமைப்பது என்பதுபற்றி தீர்க்கமாக ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டியது அவசிம். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றுகூடி இப்பிரச்னையில் கவனம் செலுத்தி யோசனைகள் கூறினால் பிரச்னையைத் தீர்ப்பது சுலபமாகவும் திருப்திகரமாகவும் முடியும்.

### தற்காலக் கல்வியில் அதிருப்தி

அநேக ஆண்டுகளாக தேசீய உணர்ச்சிபெற்ற ஒவ்வொருவரும் தற்காலத்தில் இந்நாட்டின் மக்களுக்கு புகட்டப்படும் கல்வியைப்பற்றி அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். இக்காலத்திய கல்விமுறை இந்திய மக்களின் வாழ்க்கை நலத்துக்கு ஒவ்வாததாகவும் மிகவும் குறுகிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். ஆகவே இக்கல்வியினால் கிடைக்கும் பயன் மிகவும் குறைவாயிருக்கிறது. சாதாரண மக்களின் முக்கிய தேவையைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இக் கல்வி அமைக்கப்படவில்லை. 1937-ம் வருஷத்தில் சென்னை சர்க்கார் பிறப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் நாட்டின் மக்கள் எல்லோரும் சிறிது சிறிதாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக ஆகும்படி செய்வதுதான் ஆரம்பக் கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கமென்று சர்க்கார் கூறியிருக்கின்றனர்

### அடிப்படைக் கல்வித் திட்டம்

காங்கிரஸ் மந்திரி சபைகள் பல மாகாணங்களில் ஏற்பட்டபிறகு தேசீய முறையின் கல்வித்திட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 1937 வருஷம், ஜூலை 31உ "ஹரிஜன்" பத்திரிகையில் காந்திஜி கல்வி என்ன என்பதை விளக்கிக் கூறுகையில், எழுதப் படிக்கத் தெரிவதுமட்டும் கல்வி அல்லவென்றும், குழந்தைகள் மனிதர்களிடமுள்ள உள்ளுணர்ச்சிகளை வெளிக்கொண்டு வருவதுதான் உண்மையான கல்வி என்றும் சொன்னார். இதுசம்பந்தமாக இப்பொழுது பிரபலமாகவிருக்கும் அடிப்படைக் கல்வித்திட்டத்தை காந்திஜி தயாரித்தார். இந்த

* சுதேசமித்ரன் மொழி பெயர்ப்பு.

திட்டம் உலகிலுள்ள கல்விவான்களால் நன்கு பரிசீலனை செய்யப்பட்ட பிறகு இதுவே சாலச்சிறந்ததென ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த வார்தா திட்டம் பல பாடசாலைகளில் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. தற்காலம் இந்த மாகாணத்தில் வார்தா கல்வி திட்டத்தை அனுஷ்டிக்கும் பாடசாலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கல்வித் திட்டத்தை 5 வருஷங்களாக ஆரம்பித்து நடத்திய மாகாணங்களுக்குள் ஒரிஸ்ஸாவைத் தவிர பாக்கியிடங்களில் இத்திட்டம் வெற்றிகரமாகவே இருந்து வந்திருப்பதாகவும், பீகார் மாகாணத்திலும், காஷ்மீர் சமஸ்தானத்திலும் இத்திட்டம் ரொம்பவும் திருப்திகரமாக வெற்றிபெற்றிருப்பதாகவும் ஸ்ரீ அரியநாயகம் சமீபத்தில் அகில இந்திய அடிப்படைக் கல்வி போர்டின் கூட்டத்தில் குறிப்பிட்டது எனக்கு மிகவும் ஆறுதல் அளிக்கிறது.

## ஸார்ஜண்டு திட்டம்

ஸார்ஜண்டு திட்டம், ஆரம்ப பாடசாலைமுதல் சர்வகலாசாலைக் கல்விவரையில் ஒவ்வொரு அம்சத்தையும் பரிசீலனை செய்து அமைக்கப் பட்டிருக்கிறது. முதியோர் கல்விக்கும் இத்திட்டத்தில் முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களின் வைத்திய வசதிகள் உடல் நலப்பயிற்சி முதலியவற்றிலும் திட்டம் கவனம் செலுத்தியிருக்கிறது. தேசியக்கல்வி திட்டத்தில் ஸ்திரீ, புருஷர் எல்லோரும் பூர்ணமாகக்கல்வி கற்கக்கூடிய சந்தர்ப்பம் சமமாக இருக்கவேண்டியது அவசியம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வி அவர்களுடைய பிற்கால வாழ்க்கைக்குத்தேவையான பொருளைச் சம்பாதித்துக் கொடுக்கக்கூடியதாகவும், நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர செலுத்தும்படி செய்யக்கூடியதாகவும், சாமர்த்தியம் உள்ளவர்களுக்கு அவர்கள் பொறுப்பான பதவிகளைப் பெறுவதற்குத் தக்க பயிற்சி அளிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். பால்யத்தில் கல்வி கற்கத்தவறிய முதியோர்களுக்கு சீக்கிரமாகவே எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பதுடன், அவரவர்கள் வாழ்க்கைக்கும் வேலைக்கும் தேவையான விஷயங்களில் ஞானம் ஏற்படக்கூடியதாகவும் தேசியக் கல்வித்திட்டம் அமைக்கப்படவேண்டும்.

## மேல் படிப்புக்கு வசதிகள்

ஸார்ஜண்ட் திட்டப்படி மேற்படிப்புக்குச் செல்ல விரும்புவோருக்கு தக்க வசதிகள் இருக்கவேண்டும். 6-வயது முதல் 14 வயது வரையில் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடங்களில் கட்டாய இலவசக் கல்வி கற்பிக்கப்படவேண்டும். அக்கல்வி, வார்தா அடிப்படைக் கல்வித்திட்ட முறையில் அமைக்கப்படவேண்டும். மேல் படிப்புக்குச் செல்ல விரும்பும் மாணவர்களைப் பரீக்ஷை செய்தபிறகு, தகுந்த சாமர்த்தியம் இருப்பவர்களுக்கு மேற்படிப்பு அளிக்க வசதி இருக்கவேண்டியது அவசியம். பணம் இல்லாத மாணவருக்கு மேல்படிப்புக்கு ஸ்காலர்ஷிப் முதலிய ஊதிய வகைகளால் உதவிபுரிய வேண்டியதும் அவசியம். மேற்படி பலதரப்பட்ட முறைகளில் கல்வி கற்பிக்கத்தேவையான ஆசிரியர்களுக்கு நன்கு பயிற்சி அளித்து அவர்களுடைய வாழ்க்கை நலன்களையும் பொருள் நிலைமையையும் கவனித்து அவர்களுக்குத் தக்கவாறு ஊதியம் கொடுப்பதும் தேசியக் கல்வித்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இத்திட்டம் பூராவும் அமுலுக்குவர 40 வருஷங்கள் பிடிக்கும். பிறகு இது

சம்பந்தமாக பிரதி வருஷமும் சர்க்கார் 277 கோடி ரூபாய் செலவழிக்க நேரிடும். இத்திட்டத்தின் விவரங்கள் பரிசீலனை செய்யத் தகுந்தவை.

## தேசீய சர்க்காரிடம் கல்வி ஒப்படைக்கப்படவேண்டும்

சென்ற ஒருதலைமுறைக்கு முன்பாகவே ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே இந்த நாட்டில் கட்டாய இலவசக் கல்வி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படிக்கும் இந்திய சர்க்காரை வற்புறுத்தியிருக்கிறார். கட்டாயக் கல்வி ஏற்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரம் மாகாண அரசாங்கங்களிடம் வந்து 25 வருஷங்களாகின்றன. இதுவிஷயத்தில் ஒருவிடத்திலும் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. நீண்டகாலத்தை வியர்த்தமாக்கிவிட்டோம். இனியும் காலதாமதம் செய்வது கூடாது. கல்வித்திட்டத்தின் புனரமைப்பும் நிர்வாகமும், தேசீய சர்க்கார்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். நான் இப்படி கூறுவதனால் யுத்தத்திற்குப் பிறகு கல்வி புனரமைப்பு திட்டத்திற்கு ஆலோசனைகூற நியமிக்கப்பட்ட மத்திய கமிட்டியின் சிபார்சுகளை நாட்டில் தேசீய சர்க்கார்கள் ஏற்படும் வரையில் ஒத்திவைக்க வேண்டுமென்பது என் கருத்தல்ல. தேசீய சர்க்கார் அமைப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டால் தற்பொழுதுள்ள சர்க்காரே இந்த யுத்த காலத்தில்கூட மேற்படி கமிட்டி சிபார்சுகளை கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவருவதில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவர்கள் கடமையாகும். கல்வி சம்பந்தமாக நிறுவப்படும் திட்டத்திலுள்ள முக்கியமான கொள்கைகளைப் பரிசீலனை செய்து அமுலுக்குக் கொண்டுவருவதில் பொதுஜன அபிப்பிராயத்தைப் பிரதி பலிக்கும் தேசீய சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகள்தான் விசேஷமென்பதே என் அபிப்பிராயம்.

சார்ஜண்டு திட்டத்தை அமுலுக்கு கொண்டுவருவதால் தற்காலத்திலுள்ள ஆசிரியர்களைத் திடீரென்று வேலையைவிட்டு விலக்கக் கூடாது. புதியமுறைக் கல்வித்திட்டத்தில் அவர்களுக்கும் போதிய பயிற்சி அளித்து வேலையில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டியது ஒரு முக்கியமான பிரச்னையாகும்.

## கட்டாயக் கல்வி

யுத்தத்திற்குப்பிறகு பொதுஜனக் கல்விக்காக ஜனங்கள் மீண்டும் இரண்டு தலைமுறைகள் காத்துக்கொண்டிருக்க முடியாது. ருஷியாவில் 1930 வருஷம் முதல் 13 வருஷங்களுக்குள் கட்டாயக் கல்வி முறை அமுலுக்கு வந்துவிட்டது. பம்பாய் திட்டப்படி 15 வருஷங்களுக்குள் இம்முறையை அமுலுக்குக் கொண்டுவரமுடியும். அடிப்படைக் கல்வித் திட்டத்தில் வகுப்புப் பாடங்களின் விவரம் குறிப்பிடப்படாததினால், அதைப்பற்றி நான் பேசுவது கூடவில்லை. ஆங்கிலத்தைத்தவிர பாக்கி எல்லாப்பாடங்களிலும் மெட்ரிகுலேஷன் வகுப்பு அளவு ஞானம் ஏற்படும்படி கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று காந்திஜி கூறியுள்ளார். ஸார்ஜண்டு திட்டத்தில் இந்த அளவுக்குப் போதியவாறு கல்விமுறை அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

## உயர்தரக் கல்வி

உயர்தரக் கல்விக்கு மாணவர்களை பொறுக்கி எடுப்பது அந்தந்த மாணவரின் திறமை அறிவு இவற்றையும் சம்பந்தப்பட்ட பாடசாலைத்

தலைமை ஆசிரியர்கள் மேற்படி மாணவர்களைப்பற்றிக் கூறும் குறிப்புகளையும் ஆதாரமாகக்கொண்டு இருக்கவேண்டுமென்றும் எந்தெந்த பெற்றோர்கள் மாணவர்களின் கல்விச்செலவுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கிறார்களோ அந்தந்த மாணவர்களையும் உயர்தரப் படிப்புக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஸார்ஜண்டு திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதுபோன்றபல முக்கிய பிரச்னைகள் இருக்கின்றன. மகாநாட்டில் இவைகள் நன்கு பரிசீலனை செய்யப்படவேண்டும்.

## தனி பெண் பாடசாலைகள் அவசியம்

11 வயது வரையில் சிறுமிகள் சிறுவர்களுடன் சேர்ந்து படிக்கலாமென்றும் 11 வயதுமுதல் 14 வயதுவரையில் சிறுமிகளுக்குத் தனி பாடசாலைகள் ஸ்தாபிக்கலாமென்றும் கூறப்படுகிறது. இது சரியல்ல. பல ஆண்டுகள் வரையில் தனி பெண்பாடசாலைகள் அநேகம் அவசியமாகும்.

ஒரே கட்டிடத்தில் மூலக்கல்வி பாடசாலை இருக்கவேண்டும், அப்பாடசாலையிலேயே 8 வகுப்புகளும் நடத்தலாம். 5 ஜூனியர் வகுப்புகளும் 3 சீனியர் வகுப்புகளும் இருக்கலாம். ஆனால் ஒரே தலைமை ஆசிரியரே இருக்கவேண்டும். ஹைஸ்கூலில் மத்ய பாடசாலை பகுதி வேண்டியதில்லை.

## முதியோர் கல்வி

முதியோர் கல்வி விஷயத்தில் சர்க்கார் தனது கடமையைச் சிறிதும் நிறைவேற்றவில்லை. ஜனத்தொகையில் 83 சதவீதம் பேருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சென்னை சர்க்காரும் இதுவிஷயத்தில் மிகவும் பிற்போக்காகவே நடக்கின்றனர்.

முதியோருக்கு கல்வி அறிவு அவசியம். இதற்கு பல காரணங்கள் கூறலாம். வருங்கால ஜனநாயக இந்தியாவில் வயதுவந்தவருக்கு வோட்டுரிமை இருக்கும். அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிந்தே இருக்க வேண்டும். முதியோர் எளிதில் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளலாம்.

இவ்விஷயமாக ரஷ்யாவில் என்ன நடந்ததென்பதை குறிப்பிடுகிறேன்.

வகுப்புகள் நடத்தி அவற்றிற்கு தவறுமல் வரும் முதியவர்களுக்கு சன்மானங்களை கொடுத்தனர். துணி முதலியவை கொடுத்தனர். கட்டாய சர்வஜனக் கல்வி சட்ட அமுலுக்கு வந்த பின்னும் முன்பும் இப்படி நடந்தது.

ரஷ்ய கல்விமுயற்சிக்கு ஆதாரமாக புரட்சி கட்சி, தலைவர்கள். சோவியத் சிக்கனம் இவை இருந்தன நம் நாட்டில் அந்த சாதனங்கள் இல்லை. இருந்தாலும் லக்ஷியத்தை நம்மால் நிறைவேற்ற முடியாமற் போகாது. முதியோர் கல்வி பொறுப்பை சர்க்கார் ஏற்கவேண்டும். துரிதமான பலன்களைத் தரத்தக்க ஒருதிட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்து ஜனங்களின் உற்சாகத்தையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும், தேசீய சர்க்கார் இல்லாதது இவ்விஷயத்தில் ஒரு குறையாகவே இருக்கிறது.

இந்திய சர்க்காரின் செலவிடாத கடன் பணக்கையிருப்பு இவ்வருஷம் ரூ. 400 கோடிக்கு அதிகமாகும். அதில் ரூ. 100 கோடியை முதியோர் கல்வி நிதிக்காக ஒதுக்கலாம்.

# மௌன வாசிப்பு—(Silent Reading)

M. K. சிவராமன், தலைமை ஆசிரியர்,
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பாபிரெட்டிபட்டி

## மௌன வாசிப்பு என்றால் என்ன?

எந்த பாஷையிலும் நாம் சிறந்த தேர்ச்சி பெற்று விளங்க கிரகித்தல், வெளியிடுதல் என்ற இரண்டு முக்கிய அம்சங்களிலும் நன்கு கவனம் பெறவேண்டும். மேற்கூறிய இரண்டினுள் வெளியிடுதல் என்ற அம்சமே தற்காலத்தில் மிகவும் வற்புறுத்தப்படுகிறது. ஏனெனில் சமீபகாலம் வரை வெளியிடுதல் என்ற அம்சம் புறக்கணிக்கப்பட்டது. வெளியிடுதல் என்ற அம்சம் எவ்வளவுதான் முக்கியம் என்ற போதிலும் இதற்குப் பெரிதும் துணை செய்வதும் அடிப்படையானதும் கிரகித்தல். ஆகையால் மாணவர்களின் வெளியிடும் திறன்களை விருத்திசெய்யப் பலவித உபாயங்களைக் கையாளுவதுபோல் அதற்குமுன் கிரகித்தல் அம்சத்தை விருத்தி செய்யவும் பலவித முறைகளைக் கையாளுவது அவசியமாகும். சிறந்த கிரகிக்கும் சக்தியினால் அதிகமான விஷயங்களைக் கிரகித்து அறியலாம். அதுவே வெளியிடுவதற்குரிய விஷயத்தை நமக்கு அளித்து உதவுவதாகும்.

மேற்கூறிய கிரகிக்கும் சக்தியை விருத்தி செய்வதில் மௌன வாசிப்பைப்போல் உற்ற துணையாக உதவுவது வேறு ஒன்றுமில்லை. உதடுகளை அசைத்துப் பேச்சுக் கருவிகளுக்கு (Speech Organs) வேலை கொடுக்காமல் கண்ணில் பார்ப்பதால் மட்டும் புத்தகம் அல்லது எழுதப் பட்ட கடிதங்களினின்று அவற்றில் காணப்படும் விஷயத்தை அறிந்து கொள்வதே மௌன வாசிப்பு எனப்படும்.

## மௌன வாசிப்பின் அவசியமும் நன்மையும்

தற்கால கல்வியின் நோக்கம் கற்போன் தனது உலக வாழ்க்கையைச் செவ்வனே நடத்தப் போதுமான அளவு அறிவு பெறுவதாகும். அப்போதுதான் அவன் ஓர் சிறந்த பிரஜையாக விளங்கலாம். வாய்மொழியை அனுசரித்து ஆரம்பத்தில் படிப்பு என்று ஏற்படுவது உரக்கப் படித்தலே யாகும். மௌன வாசிப்பு என்பது ஓரளவு பழக்கத்தால் பின்னாலேயே ஏற்படுவதாகும். சமீப காலத்திலிருந்துதான் இதன் முக்கியம் அதிகரித்து வருகிறது. உரக்க வாசிப்பதிலுள்ள குறைபாடுகளே மௌன வாசிப்பின் அவசியத்தை நன்கு விளக்குகின்றது.

உரக்க வாசித்தலில் ஒருவன் அதிக நேரம் ஈடுபடமுடியாது. சீக்கிரம் களைப்பு ஏற்படும். பேச்சு உறுப்புகளுக்கு வேலை அதிகம். உரக்க வாசிக்கும்போது மாணவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு வேலைகளில் ஈடுபடவேண்டியிருக்கிறது. அவர்கள் கவனம் பெரும்பாலும் உச்சரிப்புச் சரியாய் அமைகிறதா என்பது பற்றியே யாகும். இதனால் கிரகித்தலில் தடை ஏற்படுகிறது. மற்றும் வகுப்பறையில் எல்லா மாணவர்களும் ஒரே சமயம் உரக்க வாசிக்கமுடியாது. ஒருவரால் மற்றவருக்கு இடையூறு ஏற்படும். பிற்காலத்தில் மாணவன் தனது ஓய்வு நேரத்தை நல்ல வழியில் செலவிட நூல் நிலயத்திலிருந்து சிறந்த புத்தகங்கள் அடிக்கடி படித்து மனச் சந்துஷ்டி அடையவும், பொதுஜன வாசகசாலை போன்ற பலர்கூடி வாசிக்க நேரும் இடங்களில் சமாசாரப் பத்திரிகைகள் வாசித்து உலகத்தில் பல விடங்களில் நடக்கும் விஷயங்களை அறிந்து உலகியல்

அறிவை விருத்திசெய்து கொள்வதற்கும் மௌன வாசிப்பு மிகவும் ஏற்றதாகும். மேற்சொன்ன இரண்டு சந்தர்ப்பங்களிலும் உரக்க வாசித்தல் பயன்படாது. கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது முதுமொழி. அவ்வாறு பற்பல விஷயங்களையும் படித்து அறிந்துகொள்ள மௌன வாசிப்பே பயன்தரும். உரக்க வாசிப்பது சிரமம். ஓர் குறிப்பிட்ட விஷயத்தை உரக்க வாசித்து கிரகித்துக்கொள்ள எடுத்துக்கொள்ளும் காலத்தைவிட அதே விஷயத்தை மௌனமாக வாசித்து கிரகித்துக் கொள்ள எடுத்துக்கொள்ளும் காலம் மிகக் குறைவு. தற்காலத்தில் அறிவிற் சிறந்த பெரியோர்களின் படிப்பு யாவும் மௌன வாசிப்பின் பால் அமைந்துள்ளதே யன்றி பிறிதொன்றுமில்லை. உயர்தர வகுப்புகளில் பற்பல பகிரங்க பரீக்ஷைகளுக்கு (Public Examinations) அதிக எண்ணிக்கையுடைய புத்தகங்களைப் படித்து அதிக விஷயத்தை குறுகிய காலத்தில் உடல் நலத்திற்கு இடையூறின்றி கிரகிக்கவும் பல மணிநேரம் தொடர்ந்தாற்போல் படிக்கும் வேலையில் ஈடுபடவும் மௌன வாசிப்பே ஏற்றதாகும். படிப்பின்மேல் ஆசை உண்டாக்கும். பல மணிநேரம் உரக்க வாசித்தலால் உடல் நலத்திற்கு பாதகம் ஏற்படும். காலதாமதம், படிப்பின்மேல் பொதுவாக வெறுப்பான மனப்பான்மை போன்றவை ஏற்படும். மேற்கூறிய காரணங்களால் மௌன வாசிப்பின் அவசியமும் அதனால் ஏற்படுகின்ற நன்மைகள் யாவை என்பதும் விளங்கும்.

## பற்பல நிலைகளிலும் மௌன வாசிப்பை வளர்ப்பது எப்படி ?

மாணவர்களுக்குத் தூய தீய பழக்கங்கள் ஏற்படுவது இளம்பருவத்திலேயே. தீய பழக்கங்களைக் களைந்து தூய பழக்கங்களை ஏற்படுத்துவதும் விருத்திசெய்து நிலைபெறச் செய்வதும் ஆசிரியர்களது முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். அவ்வாறு ஆசிரியர் மாணவர்களுக்கு ஏற்படுத்தும் பல்வகை நற்பழக்கங்களில் ஒன்றானதும், முக்கியமானதும் மௌன வாசிப்பு பழக்கமாகும். எந்தக் கடினமான பழக்கமும் இளமையில் ஏற்பட்டுவிட்டால் பின்பு சகஜமாகிவிடும். அதனாலேயே மௌனவாசிப்பு என்ற நற்பழக்கமும் கீழ் வகுப்பிலேயே ஓரளவு ஆரம்பமாகிறது.

ஆரம்பத்தில் மாணவர்கள் சொற்களை உச்சரிக்கத்தான் செய்வார்கள். உச்சரித்தால் தான் அவர்களுக்கு அப்பதங்களின் பொருள் விளங்கும். பிறகே அவர்கள் கண்ணால் பார்ப்பதின் மூலம் பதங்களின் பொருளை அறிவர். இந்த மௌன வாசிப்புப் பழக்கத்தை முதன் முதலில் மாணவர்களது தாய் பாஷையில் ஏற்படுத்தி விட்டால் பிறகு எப் பாஷையிலும் விஷயத்தை கிரகிக்க இச்சிறந்த பழக்கத்தை மேற்கொள்ளுவது எளிதாகும். இரண்டாம் வகுப்பிலேயே தாய் பாஷையில் மௌன வாசிப்பை ஆரம்பிக்கவேண்டும். இவ் வகுப்பில் நூற்றுக்கு நாற்பது விதமும் மூன்றாம் வகுப்பில் நூற்றுக்கு அறுபது விதமும் மௌன வாசிப்பு அமையவேண்டும். பின்பு படிப்படியாய் விருத்தியாக வேண்டும். ஆரம்பத்தில் மாணவர்கள் சிறிது உதடு அசைப்பர். பிறகு அது நின்று மௌனமாகப் படிப்பது இயல்பாகும்.

இரண்டாம் வகுப்பில் கட்டளைகளை வெளியிடும் சிறு வாக்கியங்களைக் கொண்ட மின் அட்டைகளை (Flash Cards) மாணவர்களிடம் காட்டிகட்டளையை உரக்கப் படிக்காமல் அதற்கு ஏற்ற துலங்கல்களைப் புரியச் செய்யவேண்டும்.

'நீங்கள் எல்லாம் எழுந்திருங்கள், தோட்டம் சென்று ஒரு பூ கொண்டுவா, நீ காகமும் வடையும் கதையைச் சொல்லு. இரண்டாம் பாடம் பார்த்து எழுதுங்கள்' போன்ற கட்டளைகளைப் பேசாமல் கீழ்ப் படியச் செய்யலாம். கரும்பலகையில் சில உத்திரவுகளைப் பெரிய எழுத்துகளில் எழுதிக் கீழ்ப்படியச் செய்யலாம். மாணவர்களிடம் சிறு அட்டைத் துண்டுகளில் வரையப்பட்ட படங்களையும் அவற்றின் பெயர் கொண்ட தனித்தனி அட்டைகளையும் கலந்து கொடுத்து படத்தையும் அதன் பெயர் எழுதிய அட்டையையும் இணைக்கச் செய்யலாம். (Matching.)

மூன்றும் வகுப்பில் மேற்கூறியவற்றுடன் 'வாக்கியங்களையும் செய்கைகளை விளக்கும் படங்களைப் பொருத்துதல், நாளைக்கு பொங்கல் பண்டிகை, பள்ளிக்கூடம் இல்லை' என்பது போன்ற விஷயங்களை வாயால் கூறுது கரும்பலகையில் எழுதி அறியுமாறு செய்யலாம்.' அத்துடன் நான்கு ஐந்து வாக்கியங்கள் கொண்டு ஓர் மிகச் சிறிய சம்பவங்கொண்ட தாள்களை ஆளுக்கொன்று கொடுத்து அதை மௌனமாகப் படித்தறிய குறிப்பிட்ட நேரம் கொடுத்துப் பின்பு சிறு கேள்விகள் மூலம் கிரகித்த லைச் சோதிக்கலாம். பழக்கம் அதிகமாக கால அளவைக் குறைத்து கிரகித்தலில் விரைவு உண்டாக்குவது அவசியம்.

நான்கு ஐந்தாம் வகுப்புகளில் பிரதம பாடத்திற்கு ஒதுக்கப் பட்ட நேரத்தில் சிறிதளவு மௌன வாசிப்புக்கு ஒதுக்கப்படுகிறது. அத்துடன் அதிகமான உப புத்தகங்கள் கொடுத்து மௌனமாகப் படித்து விஷயங்களை அறியச் செய்தலும், பத்திரிகையில் வரும் சம்ப வத்தை மௌனமாகப் படித்து சாராம்சத்தை அறிவதும் அவசியம். குறிப்பிட்ட ஓர் கதையைப் படித்தபின் சிறு கேள்விகள் மூலமும், ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சுருக்கமாய் கூறச் செய்வதன் மூலமும் சிறந்த பயிற்சி அளிக்கலாம். மௌன வாசிப்புக்குப் பின் தக்க சோதனை அவ சியம். ஆனால் கேள்விகள் நுணுநுணுக்கமா யிராமல் மேலெழுந்தவாரி யாகவும் பொதுக் கருத்தை வருவிக்கத் தக்கதாகவும் அமையவேண்டும். கீழ் வகுப்புகளில் படித்ததைக் கொண்டு நேரே ஒரு வாக்கியத்தில் விடையளிக்கக் கூடியதாயும் மேல் வகுப்புகளில் படித்ததை ஒப்புவிக்கா மல் சற்று சிந்தித்து இரண்டு மூன்று வாக்கியங்களாக பதிலளிக்கக் கூடியதாய் இருக்கலாம்.

### மேல்வகுப்புகளில் மௌன வாசிப்பை வளர்க்கும் விதமும் புத்தகங் களும் .—

மாணவரது பிற்கால வாழ்க்கையில் அவர்களது படிப்பு பூராவும் மௌன வாசிப்பாகவே அமையவேண்டியிருக்கிறது. அதனால் மேல் வகுப்புகளில் குறித்த அபிவிருத்தியும் மிக விரைவில் விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியும் ஏற்படுத்துதல் அவசியம். மௌன வாசிப்பில் அபிவிருத்திக்கான மாணவரின் தனித்திறமைகளை அனுசரித்து அதற் கேற்றபடி படிக்கக் கொடுக்கும் கால அளவை நிர்ணயித்தலிலும், சரியான முறையில் ஏற்ற சோதனைகள் செய்தலிலும் மௌன வாசிப்பிற்குத் தேர்ந்தெடுக்கும் புத்தகங்களைப்பற்றியும் விசேஷ கவனம் செலுத்தப் படவேண்டும். மௌனவாசிப்பில் சிறந்த வெற்றிபெற ஏற்ற புத்தகங் களை தேர்ந்தெடுப்பது மிகவும் அவசியமாகும்.

ஆசிரியர்கள் மௌன வாசிப்புக்கென்று தேர்ந்தெடுக்கும் புத்தகங்கள் பெரும்பாலும் பிரதம பாடபுத்தகம் எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் வாய்ந்ததாக உள்ளன. அதிக கடினமான பதங்கள் வரும்போது அங்கு மாணவர் அடிக்கடி பார்வையை நிறுத்தும்படியும் அதையே மீண்டும் ஓர்தடவை பார்க்கும்படியும் ஏற்படுகிறது. ஒரே பார்வையில் பார்த்து அறிந்துகொள்ளக்கூடிய வார்த்தைகளின் எண்ணிக்கை குறைகிறது. எவ்வளவுக்கெவ்வளவு இந்த எண்ணிக்கை அதிகமாய் இருக்கக்கூடுமோ அவ்வளவு அதிகமானுல்தான் மௌனவாசிப்பில் அபிவிருத்தி காணமுடியும். ஓர் வகுப்பிற்கு மௌன வாசிப்புக்கு என்று தேர்ந்தெடுக்கும் புத்தகம் அவ்வகுப்பிற்கு அடுத்த கீழ்வகுப்பிற்கு ஏற்பட்டுள்ள பிரதமபாடப்புத்தகத்தைப்போன்ற கடினத்துவம் உடையதாய் இருக்கவேண்டும். அதாவது 7-வது வகுப்பு மாணவனுக்குத் தேர்ந்தெடுக்கும் மௌன வாசிப்புக்குரிய புத்தகம் 6-ஆம் வகுப்பு பிரதம பாடபுத்தகத்தை யொத்த கடினத்துவம் உள்ளதாய் இருப்பின் போதுமானது இதனுல் அடுத்தகீழ்வகுப்பு பிரதம பாடபுத்தகத்தையே மௌன வாசிப்டக்கு தேர்ந்தெடுப்பது தவறு.

இரண்டாவதாக கீழ்வகுப்புகளிலும் மேல்வகுப்புகளிலும்கூட விசேஷமாக மௌன வாசிப்புக்கென தேர்ந்து எடுக்கும் புத்தகங்கள் கதைப் புத்தகங்களாகவே இருக்கின்றன. கீழ்வகுப்பு மாணவர்களுக்கு அந்த நிலேயில் அவர்களுக்கு விருப்பம் தரத்தக்கது கதைப் புத்தகங்களே எனினும் மேல்வகுப்புகளிலும் கதைப்புத்தகங்களே பெரும்பாலும் காணப்படுவதால் மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்களேப் படிப்பதில் அவ்வளவு விருப்பமில்லாமல் போவதுடன் பொதுவாக படிப்பிலேயே வெறுப்பு மனப்பான்மை ஏற்படுகிறது. கதைப்புத்தகங்கள் ஒன்றிரண்டு இருக்கலாம் என்றுலும் வேறு பலவிதமான புத்தகங்களும் அவசியமாகும். வீரதீரச் செயல்களே விளக்கும் சம்பவங்கள் அடங்கிய புத்தகங்களும், துப்பறியும் கதைகளுடன்கூடிய புத்தகங்களும், பிரயாணச் சம்பவங்களே விவரிக்கும் புத்தகங்களும், மகாத்மா காந்தி, கோபாலகிருஷ்ண கோகலே, சர். சி. வி. ராமன் போன்றவர்களின் ஜீவிய சரித்திரக் கதைகளும், ஆகாய விமானம், ரேடியோ போன்ற தற்கால விஷயங்களேப் பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகளும், மேட்டூர் அணே, தாஜ்மஹால் போன்றவற்றை வர்ணித்துக்கூறும் வர்ணனேக் கட்டுரைகளும் கொண்ட பற்பல விஷயங்களும் அடங்கியுள்ள மௌன வாசிப்பிற்குரிய புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அப்போதுதான் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களேப்படிக்க ஆவல் ஏற்படும். மௌன வாசிப்பை விருத்தி செய்ய பாடசாலேயில் வகுப்பறை நூல்நிலயம் (Classroom library) மிக அவசியம். தற்கால பொருளாதார நெருக்கடியில் இது சாத்தியமில்லேயாயினும் கூடுமானவரையில் ஏற்ற புத்தகங்களேத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு வகுப்பிற்கும் மாணவர்களிடையே விநியோகித்தல் நலம். இவற்றை மாற்றி எல்லா புத்தகங்களும் ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். இத்துடன் தாய்பாஷையில் வெளியாகும் பிரபல தினசரி, வாரப் பத்திரிகைகள் பள்ளிக்கூடத்தில் வரவழைக்கப்பட்டு அவற்றை மாணவர்கள் இடைவேளேகளில் படித்து அறியும் நற்பழக்கத்தை ஏற்படுத்தலாம்.

புத்தகங்களில் அதிகமான கடின பதங்கள் வருவதால் கண்ஜாண் (Eye span) அளவு மிகக் குறையும். கூடியவரையில் காணப்படும் சொற்

களும், சொற்றொடர்களும் மாணவர்கள் நன்கு அறிந்ததாய் இருப்பது நலம். ஆயினும் ஒன்றிரண்டு புதிய பிரயோகங்கள் வருவது இயல்பு. இப்புதிய பதங்களையும் அவற்றின் பொருளையும் அறிந்தபின்தான் படிக்கத்தொடங்க வேண்டுமென்பது 'நீந்தக் கற்றுக்கொண்டுதான் தண்ணீரில் இறங்கவேண்டு'மென்பதை ஒக்கும் அக்கடின பதங்களின் பொருளை சந்தர்ப்பத்தை அனுசரித்துப் புரிந்துகொள்ளலாம் அல்லது குறித்து வைத்திருந்து பின்னால் ஆசிரியரைக்கேட்டும் தெரிந்துகொள்ளலாம். அதுவுமல்லாமல் பொதுவாகக் கருத்தை நன்கு அறிந்தால் போதுமானது. ஒவ்வொரு வார்த்தையையும் நுட்பமாய் அறியவேண்டுமென்பது மௌனவாசிப்பின் நோக்கமல்ல.

மௌனவாசிப்பை விருத்திசெய்ய நாம் உரிய புத்தகங்களை மாணவர் கையில் கொடுக்குமுன் தக்கமுறையில் அவர்களுக்கு அவற்றைப் படிக்கவேண்டுமென்ற உற்சாகத்தை ஏற்படுத்தவேண்டும். புத்தகத்தை மாணவரிடம் கொடுக்குமுன் சந்தர்ப்பத்தை அனுசரித்து சரித்திர சம்பந்தமான அடிப்படை இருந்தால் அதை எடுத்துக் கூறலாம். சில விசேஷமான பகுதிகளை வாசித்துக்காட்டி அதன்மூலம் மாணவரை வாசிக்கத் தூண்டலாம். ஜீவிய சரித்திரக் கதைகளானால் அதில் ஏதாவது ஓர் சிறந்த பகுதியைக்கூறி மற்றவற்றை படிக்குமாறு தூண்டும் புத்தகம் எழுதிய ஆசிரியரைப்பற்றியும் அவர் திறமையைப்பற்றியும் சிலாகித்துப்பேசுவதால் அத்தகைய ஆசிரியர் எழுதிய புத்தகங்களை வாசிக்க வேண்டுமென்ற அவா ஏற்படும். குறிப்பிட்ட ஓர் பகுதியைப்படித்து அறிய எல்லா மாணவர்களுக்கும் ஒரே அளவான காலம் கொடுப்பதால் பிற்போக்கான மாணவர்களுக்கு கஷ்டமும் மிக விரைவில் கிரகிக்கும் மாணவர்களுக்கு (Advanced pupils) உற்சாகமின்மையும் ஏற்படும். இதைத் தவிர்க்க வகுப்பு மாணவர்களைத் திறமைக்கேற்றபடி மூன்று அல்லது நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஓர் குறிப்பிட்ட பகுதியைப் படிக்க திறமையுள்ள பிரிவுக்கு காலம் குறைவாகவும் பிறவற்றிற்கு காலம் சிறிதளவு அதிகப்படுத்தியும் கொடுத்தல் அவசியம். அத்துடன் படிக்கக்கொடுக்கும் கால அளவையும் நாளடைவில் படிப்படியாக குறைத்து கிரகிக்கும் வேகத்தை அதிகப்படுத்தவேண்டும். ஒரு நிமிஷத்தில் ஒவ்வொரு மாணவனும் கிரகிக்கக்கூடிய வார்த்தைகளின் எண்ணிக்கைபற்றி ஆசிரியர்க்குத் திட்டமான அறிவுவேண்டும். அப்போதுதான் ஆசிரியர் இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தப் பாடுபடக்கூடும். இவ்வாறு பலவித உபாயங்களையும் சிரத்தையுடன் ஆசிரியர் கையாண்டால்தான் மௌன வாசிப்பில் விருத்தி ஏற்படுத்த முடியும். இதில் விசேஷமாக ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள் அதிகமான பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். தற்காலத்தில் மௌன வாசிப்பிற்கென பிரதம பாடபுத்தகத்தில் பாடம் நடத்தும்போது சில நிமிஷங்கள் ஒதுக்குகின்றனர். அத்துடன் வாரத்தில் நூல் நிலையப் புத்தகப் படிப்புக்கு ஓர் பாடகாலம் ஒதுக்கிவிட்டிருக்கின்றனர். இதனால் மட்டும் மௌன வாசிப்பில் மாணவர்களுக்கு தேர்ச்சி ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. மேல்கண்ட பல உபாயங்களையும் சோதனைகளையும் அனுசரித்தால்தான் மௌன வாசிப்பில் மாணவரிடையே திருப்திகரமான தேர்ச்சி காணமுடியும் என்பது துணிபு.

---

# ஆரம்ப வகுப்புகளில் கதை சொல்வதெப்படி?

(ஜி. வி. நடராஜன், கோலப்பலூர்)

கதை சொல்வதில் முதன்மையாகக் கருதத்தக்கது கேட்பவரின் வயது, வளர்ச்சி, அறிவு ஆற்றலுக்கு ஏற்றவாறு கதையைத்தேர்ந்தெடுப்பதேயாகும். ஒரு சிறுவன் தன் வாழ்க்கையளவிலும், தன்னைச்சுற்றி நடைபெறும் காரியங்களிலும் ஒவ்வொரு நாளும், தான் சம்பந்தப்பட்டிருக்கும் விஷயங்களிலும், தான் சாதாரணமாகப் பார்த்துத் தெரிந்து பழகும் விஷயங்களிலுமே கருத்துடையவனுயிருக்கிறான். இத்தகைய குழந்தைகள் தங்களைப்பற்றி, தாங்கள் செய்யும் காரியங்களைப்பற்றியுள்ள கதைகளைக் கேட்க பெரிதும் விரும்புகின்றனர். உண்மைக்கதை, கற்பனைக்கதை, மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள கதைகளைத் தேர்ந்தெடுப்பது ஆசிரியரது நோக்கமாக இருக்கவேண்டும். குழந்தைகள் கட்டுக்கதைகளைக் கேட்டு சந்தோஷப்படக்கூடும். ஆனால் அக்கதைகளுள் அச்சமோ, துன்பமோ எழும்பு இன்றவைகளைக் கவனமாக ஒழித்தல் வேண்டும். கதையைப் படித்துக் காட்டுவதிலும், சொல்வதே சிறந்த முறையாகும். கதையைப் படிப்பதால் விரும்பிய அளவு பயன் கிடைக்காது கதை சொல்லும்போது அக்கதை ஆசிரியரது கதையாகவே மாறிவிடுகிறது. அவரது தோற்றம் கதைக்கு உருவளிக்கிறது. கதையை எடுத்துச் சொல்வோர்க்கும், கேட்கும் மாணவர்களுக்குமிடையில் கூட்டுறவு நெருங்கி வலுக்கிறது. வகுப்பில் கவனம் மிகுதிப்பட்டு மனம் அங்கும் இங்கும் ஊசலாடாமல் கதையிலேயே செல்லுகின்றது. வகுப்பில் அமைதி எளிதில் நிலவுகிறது. ஆசிரியர் கண்கள் வகுப்பிலுலாவ வேண்டியபோது உறுப்புக்கள் நடிக்க, வாய் கதை சொல்ல இருப்பதென்றால் அக்கதையை படம் பிடித்துக் காட்டுவதுபோல நிகழ்ச்சிகள் நிரம்பியதாய் இருக்கவேண்டும். கதை நிகழ்ந்த காலத்து இருந்த நாடு, பட்டணம், மக்கள் முதலியவற்றைப் பற்றிய வரலாறு உள்ளது உள்ளபடியே கூறப்படவேண்டும். கதைகள் உணர்ச்சி நிரம்பியனவாய் மாணவர்களது உள்ளத்தை இழுப்பனவாய் இருக்கவேண்டும். கதை சொல்லும் ஆசிரியருக்கு முதலில் கதையின்மீது பிரியம் இருக்கவேண்டும். ஆசிரியன் தன் உணர்ச்சி (Conscious of Self) மிக்கவனுய் இருந்தால் நன்றாய் கதை சொல்லமுடியாது. குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாகப் பாவித்துக்கொண்டுதான் சொல்லவேண்டும். கதை நிகழ்ந்த காலத்தில், உண்மை அவர்கள் வாழ்க்கை முதலியவற்றோடு ஒத்துணர்ச்சி (Sympathy) இருந்தால்தான் ஆசிரியன் கதை சொல்லமுடியும். மேலும் அக்கால சம்பவங்களை மனக்கண்ணுல் பார்க்கும் கற்பனையும் வேண்டும்.

ஆசிரியர் கதையைப் பாடம்செய்துகொண்டு வரவேண்டியதில்லை. ஒப்புவிப்பதைக்காட்டிலும் தமக்கு அப்பொழுது வந்துகொண்டிருக்கும் வார்த்தைகளாலேயே கதை சொல்வதில் உயிர் உண்டு. புத்தகத்தை அடிக்கடி பார்த்து கதை சொன்னல் மாணவர்களுக்கு ஊக்கம் குறைந்து கதையில் வெறுப்புத்தட்டும். மாணவர்கள் சிறியவர்களாய் இருப்பதால் பேசும் நடை தெளிவாகவும், எளிதாகவும் இருக்கவேண்டும். கண்களுக்கு எதிரில் நடப்பதுபோலவே கதைகள் சொல்லவேண்டும். அச்சமயத்தில் ஆசிரியன் உணர்ச்சி ததும்பும்படியான குரலில் எடுத்தல், படுத்தல், நலிதல்களை அமைத்தலோடு நடித்தலினுலும் மாணவர்கள் கவனத்தை இழுக்கலாம். இடையிடையே கேள்விகளும் திருப்பிக் கூறலும் வேண்டும்.

# The National Publishing Co.

PUBLISHERS

**12, SECOND LINE BEACH, MADRAS**

**Books approved by the Text-Book Committee, Madras for use in Secondary, Elementary and Training Schools.**

*National—Readers Books I to V* by Duncan Greenlees, M.A., (Oxon).,
Book I. 0-7-9, II. 0-9-0, III. 0-10-6, IV. 0-13-0. V. 0-15-6.

*Wardha Tamil Vachakam Books I to V* by M. S. Sabesen, M.A.,
Book I. 0-3-3, Bk. II. 0-4-0, Bk. III. 0-5-3, Bk. IV. 0-6-6, Bk. V. 0-7-9.

*New Method Geography for Classes IV and V in Tamil and Telugu* by S. Srinivasa Iyer, B.A.,L.T.,
IV. Class 0-9-0, V. Class 0-11-9.

*Children's Arithmetic Books I, II and III for classes III, IV and V* by A. M. Venkatarangan, B.A.L.T.,
Book I. Rs. 0-8-0, II. Rs. 0-9-0, III. Rs. 0-10-6,

*New Method Arithmetic for Forms I, II and III* by A. M. Venkatarangan, B.A., L.T.,
Book I. Rs. 0-15-0, II. Rs. 1-0-0, III. Rs. 1-0-0.

**Training School Books**

By M. S. Sundareswaran, M.A.L.T.,

| | | | | |
|---|---|---|---|---|
| Rural Reconstruction | ... | 1 | 2 | 0 |
| Child Nature and Education | ... | 1 | 0 | 0 |
| School Administration and Organisation | ... | 0 | 11 | 0 |
| Teaching of Mathematics | ... | 1 | 0 | 0 |
| Teaching of the Mother Tongue | ... | 0 | 10 | 0 |

By R. Lakshminarasimhan, M.A.L.T.,

| | | | | |
|---|---|---|---|---|
| Teaching of History and Civics | ... | 0 | 9 | 0 |
| Teaching of Geography | ... | 0 | 9 | 0 |

*Prepared in accordance with the New Syllabus*

**Our Books for Elementary and Higher Elementary Schools**

## நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர்: N. பராசிவ அய்யர், B.A.L.T.

*Headmaster, T. A. High School, Tiruvidamarudur*

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதற் வகுப்பு) | 0 | 3 | 3 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 0 | 4 | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 0 | 5 | 6 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 0 | 6 | 6 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 0 | 7 | 6 |

## இந்துதேச சரித்திரக் கதைகள்

ஆசிரியர்: S. திருவேங்கடாசாரியார், M.A.,L.T.

*History Assistant, Ramakrishna High School, Thyagarayanagar*

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 0 | 3 | 9 |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 0 | 5 | 6 |
| மூன்றும் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 0 | 7 | 6 |

## THE HISTORY OF OUR COUNTRY

(நமது தேச சரித்திரம்)

By

S. THIRUVENKATACHARI, M.A., L.T.

*History Assistant, Sri Ramakrishna High School, Thyagarayanagar*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Book I** | **(6th Class)** | **As.** | **0** | **9** | **0** |
| **Book II** | **(7th Class)** | **As.** | **0** | **11** | **3** |
| **Book III** | **(8th Class)** | **As.** | **0** | **12** | **6** |

Planned well and prepared on the lines of the latest departmental syllabus, this series of text books of Indian History must eminently suit the needs of lower forms of our schools. The paragraph headings, the hints at the beginning of every lesson and the important dates at the end must help the pupil. The illustrations and maps are apt and sufficient.....

—*The Hindu*

## THE NEW METHOD ELEMENTARY MATHEMATICS

(புதுமுறை கணிதம்)

By

M. S. SUNDARESWARAN, M.A., L.T.

*Retired Headmaster, Wardha Training School, Coimbatore*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Book I** | **(6th Class)** | **As.** | **0** | **12** | **6** |
| **Book II** | **(7th Class)** | **As.** | **0** | **15** | **0** |
| **Book III** | **(8th Class)** | **As.** | **0** | **15** | **3** |

These books are written in simple style and contain variety of exercises with examples. Maps and diagrams are given in plenty.

B. G. PAUL & CO., Educational Publishers

4, Francis Joseph Street, MADRAS.

# 34-வது மாகாணக் கல்வி மகாநாடு

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் 34-வது மாகாணக் கல்வி மகாநாடு, அண்ணாமலை நகரில் காஷ்மீர் மாஜி திவான் ஸர் என். கோபாலஸ்வாமி அய்யங்கார் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. மே மீ 9 தேதியன்று சுமார் 500 ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் மற்றுள்ள பெரியார்களும் அண்ணாமலை பல்கலை மன்றத்திலுள்ள சாஸ்திரியார் மண்டபத்தில் கூடினர். பல்கலை மன்றத்தின் உப அத்யக்ஷகர் ஸ்ரீ எம். ரத்னசாமி மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில், சார்ஜண்டு திட்டம் கல்வி புனரமைப்பைப் பற்றியது என்றும் அதைப்பற்றி மகாநாடு, நன்கு ஆலோசிக்க வேண்டுமென்றும் கூறினார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் ராவ்பகதூர் வி. எஸ். சீனுவாசாச்சாரியார், சரித்திரப் பேராசிரியர் பிரதிநிதிகளை வரவேற்று. சிதம்பரத்தின் சரித்திர மகிமையையும், ராஜா அண்ணாமலை செட்டியாரின் பெரும் தர்மத்தையும் பற்றி விவரித்துப் பேசினார். இதன் பின்னர் ஸ்ரீமான்கள் சபேச அய்யர், ஏ. நரசிங்க ராவ், அப்துல் குத்தூஸ் சாகிப், வில்லியம்ஸ் பி. ஏ. சுப்பிரமணிய அய்யர், பி. ஆர். நம்பியார், ஸ்ரீமதி சரஸ்வதி இவர்கள் வேண்டுகோளுக்கிணங்க, ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்கார், மகாநாட்டுக்கு அக்கிராசனம் வகிக்க இசைந்தார். அவருடைய தலைமை பிரசங்கம் முடிந்த உடன் டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார், மாகாண கவர்னர், ராஜா அண்ணாமலைச் செட்டியார், ஸர் சி. பி. ராமஸ்வாமி அய்யர். ஸர் சி. ஆர். ரெட்டியார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் டி. பி. டே. முதலியோரிடமிருந்து கிடைத்த நல்வாழ்த்துக் கடிதங்களைப் படித்தார். பிறகு மகாநாடு கலைந்து மறுநாள் புதனன்று காலையில் கூடிற்று. செவ்வாய்க்கிழமை சாயங்காலம், பிரதிநிதிகளுக்கு ஒரு தேநீர் விருந்து நடந்தது.

சார்ஜண்டு திட்டத்தைப்பற்றிய விவாதம் ஸ்ரீமான் சபேச அய்யரால் துவக்கப்பட்டது. அவர் இந்த திட்டத்தைப் பாராட்டிப் பேசுகையில், இத் திட்டத்தின்படி கல்விக்கு ஏழ்மை தடையாயிராது என்றும், இத்திட்டத்தின்படி சாமர்த்தியமுள்ள பிள்ளைகள் எல்லோருக்கும் கல்விபயில போதுமான சாதக மளிக்கப்படும் என்றும், எல்லாப் பிள்ளைகளுக்கும் பூர்ண கல்வித் திரனடைய சமத்வ சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும் என்பதையும் விவரித்துச் சொன்னார். நம் நாட்டில் கல்வியின் தாழ்வான நிலையை உத்தேசித்து, இத் திட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவருவது அவசியம்; அதில் குறைகள் இருந்தால் அவைகளைப் பிறகு நீக்கிக் கொள்ளலாம் என்றும் கூறினார். மத்ய சர்க்காரின் கல்வி உத்தியோகஸ்தராகிய ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரம் பிள்ளை, சார்ஜண்டு திட்டத்தின் பல அமசங்களை விவரித்துப் பேசினார். ஒருவன் சாச்வதமாக எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளவும், தன் ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளவும், தன் பிரஜா உரிமை கடமை முதலியவைகளைச் சரிவர செலுத்தவும், எட்டு வருஷமாவது பள்ளிக்கூடங்களில் பயிற்சிபெற வேண்டுவது அவசியம் என்று அறிவாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். அதற்கு ஒப்பாக இத் திட்டத்திலும் ஆதாரக் கல்

விக்கு (Basic Edacation) 8 வருஷ திட்டம் ஏற்பட்டுள்ளது என்றும், இப் பள்ளிக்கூடங்களில் வர்தா திட்டப்படி பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுமென்றும் அவர் சொன்னார்.

ஆதாரக் கல்வி, உயர்தரக் கல்வி, தொழில் கல்வி, பல்கலைக் கல்வி, முதியோர் கல்வி, ஆசிரியர்கள், அவர்கள் பயிற்சி, சம்பளம் முதலியவைகளைப் பற்றி சார்ஜண்டு திட்டத்திலுள்ள சிபார்சுகளை விவரித்துக் கூறி, இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் வருடந்தோறும் 300 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லி, போர்க்களத்துக்குச் செல்லும் சேனாதிபதி, வெற்றி பெற எவ்வளவு பணம் பிடிக்கும் என்று கணக்கிட்டு செல்வதில்லை யென்றும், வெற்றியே லக்ஷ்யம் என்று போரில் இறங்குவார் என்றும் அவர் லக்ஷ்யம் கைகூட நாட்டினர் போதுமான பணத்தை எவ்வகையிலும் சேகரித்து அனுப்புவது போல், நாட்டில் சூழ்ந்துள்ள அறியாமையை ஒழிக்க கல்வி அபிவிர்த்தி அவசியம் என்பதை உணர்ந்து இதற்கும் வேண்டிய பணத்தை அரசாங்கத்தாரும் நாட்டினரும் கொடுத்து உதவுவார்கள் என்று தாம் நம்புவதாகக் கூறினார். ஸ்ரீமான்கள் ரத்தினசாமி, ஏ. நரசிங்கராவ், ஏ. வி. சுப்ரமணியம், கோவிந்தராஜன், பாஸ்கரன், எம். எல். சீதாராமன், முதலியோர்களும் பேசினார்கள்.

---

## மகாநாடு, மாலை 5 மணிக்கு திரும்பி கூடிற்று

ஸ்ரீமான் கஜபதி நாயக்கரும், வி. ஆர். மைலேருவும் சார்ஜண்டு திட்டத்தின் சில பகுதிகளைப் பற்றி பேசினார்கள். பிறகு ஸ்ரீமான் எம். எஸ். சுந்திரம் சொற்பொழிவுகளில் கூறப்பட்ட சில குறைகளைப் பற்றி பதிலுரைத்தார்.

Rev. Dr. Freeman Basic English என்னும் விஷயத்தைப்பற்றியும், அதைப் பாட முறையில் செங்கல்பட்டிலுள்ள St. Joseph's High School நடத்திவந்த தமது அனுபவத்தையும் விவரித்துப் பேசினர்.

தலைவர் ஸ்ரீமான் கோபால சுவாமி அய்யங்கார், தாம் முன்னதாகவே கொடைக்கானலுக்குப் போவதை முன்னிட்டு, மூன்றும் நாள் மகாநாட்டிற்கு ஸ்ரீமான் ரத்ன ஸ்வாமியை தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டு தமது முடிவுரையைக் கூறினார். அவ் வமயம், சார்ஜண்டு திட்டத்தில் பல நல்ல அம்சங்கள் இருப்பதாகவும் அதை ஒரு திட்டம் என்ன விவாதித்து குற்றம் குறைகளைக் கூறிக்கொண்டு இராமல் அதை அமுலுக்குக் கொண்டுவர ஏற்புறுத்தவேண்டுமென்றும் சொன்னார். முதியோர் கல்வியின் அவசியத்தை விஸ்தரித்துப் பேசினர். 11-ம் வயதில் தேர்ச்சியுள்ள பிள்ளைகளை செகண்டரி பள்ளிக்கூடங்களுக்கு மாற்றுவது நல்லதா என்ற சந்தேகம் தனக்கு இருப்பதாகவும், 8 வருஷகாலம் எல்லா பிள்ளைகளுக்கும் Basic school படித்தல் நலமாயிருக்குமென்றும் கூறினார்.

பிறகு ராவ்பகதூர் C. S. ஸ்ரீனிவாஸாசார்யாரும் ஸ்ரீமான் T. P. ஸ்ரீனிவாஸ வரதனும் அவருக்கு வந்தனோபசாரம் செய்து தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மூன்றாம்நாள் காலையில் மகாநாடு மறுபடியும் கூடிற்று. ஸ்ரீமான் ரத்ன ஸ்வாமி தலைமை வகித்தார். விஷய ஆலோசனைக் கமிட்டியார் அங்கீகரித்த கீண்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டன.

1. ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி, பீகம் ஆஸாத், டாக்டர் வி. விஜயராகவாச்சாரியார், ஏ. நாகராஜய்யர், ஏ. கே. கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். எஸ். சுந்திரேச அய்யர் இவர்கள் காலமானதைப்பற்றி இம் மகாநாடு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. மகாத்மா காந்தி விடுதலையடைந்ததைப்பற்றி இம்மகாநாடு சந்தோஷப்படுவதுடன், தேசத்தின் நன்மைக்காக அவர் சீக்கிரத்தில் பூரண சுகத்தை அடையும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறது.

3. சார்ஜண்டு ரிபோர்ட்டின் திட்டங்களை சட்ட அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய ஏற்பாடுகளைத் தாமதமின்றிச் செய்யும்படி சர்க்காரை இம் மகாநாடு வற்புறுத்துகிறது. சார்ஜண்டு திட்டத்தை நன்கு பரிசீலனைசெய்து ஆசிரியர் சங்கத்தின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, தென் ஆசிரியர் சங்கத்தின் காரியக் கமிட்டிக்கு ஒரு நிரந்தரக் கமிட்டி ஏற்படுத்தும்படி இம்மகாநாடு உத்திரவிடுகிறது.

4. சார்ஜண்டு ரிபோர்ட்டைப் பரிசீலனை செய்து தென்னிந்திய ஆசிரியர் சங்கம் அனுப்பப் போகும் சிபார்சுகளுக்கு விரோத மன்னியில், ஸர்விஸ் ரிஜிஸ்தரிலும், ஒப்பந்தத்திலும் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் யோசனை கூறியபடி சில மாறுதல்களை அமுலுக்குக் கொண்டு வரும்படி சர்க்காரை இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

5. கல்வியின் முன்னேற்றத்தை உத்தேசித்து கவர்ன்மெண்டல்லாத பள்ளிக்கூடங்களில் போதுமான சர்வீஸ் உள்ள ஆசிரியர்களிலிருந்து மேற்பார்வையாளர்களில் ஒவ்வொரு வருஷத்திலும் ஏற்படும் காலி ஸ்தானங்களுக்கு ஒரு விகிதப்படி நியமிக்கவேண்டும் என்ற நோக்கத்தைச் சர்க்காருக்கு இம் மகாநாடு வற்புறுத்துகிறது.

6. ஸ்தல ஸ்தாபனங்களில் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்களை நியமிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வரிசைக் கிரம திட்டம் (Panel System) திருப்திகரமாயில்லை என்பதை உணர்ந்து, அதைப் பரிசீலனை செய்து அதிலுள்ள குறைகளை நிவர்த்திக்கும்படி சர்க்காரை இம்மகாநாடு தூண்டுகிறது.

7. செக்கண்டரி கிரேடு பட்டதாரி உபாத்தியாயர்கள் எல். டி. பரீக்ஷைக்கும், ஹையர் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் செக்கண்டரி கிரேடு பரீக்ஷைக்கும். பள்ளிக்கூட வாசிப்பு ஸர்ட்டிபிகேட் இல்லாமலே அனுமதிக்கப்படவேண்டும் என்று இம்மகாநாடு சர்க்காரை வற்புறுத்துகிறது.

8. வட மலையாளத்தில் ஆகாரப் பொருள்களைப் பெறுவதில் ஆரம்ப ஆசிரியர்கள் படும் கஷ்டங்களை மிகவும் வருத்தத்துடன் நோக்கி, இக் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி சர்க்காரை இம் மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

ஸ்ரீமான்கள் N. K. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், N. குப்புசாமி அய்யங்கார், S. T. ராமானுஜ அய்யங்கார், A. சுந்திரேச அய்யர் முதலியோர்கள் சார்ஜண்டு திட்டத்தைப்பற்றிய தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். இவைகளுக்கும் ஸ்ரீமான் சுந்தரம் பதிலளித்து, பொது ஜனங்கள் ஒருமிக்க இக்கல்வி திட்டத்தைக் கோரினால், ஒரு கவர்ன் மெண்டும் அதைப் புரக்கணிக்க முடியாது என்று கூறி முடித்தார்.

ஸ்ரீமான் ஹரி ஸர்வோத்தமராவ், முதியோர்க் கல்விக்கு ஆசிரியர்களின் உதவியை நாடினார். ஸ்ரீமான் ரத்ன ஸ்வாமி தனது முடிவுரையில், அண்ணாமலைப் பல்கலை மன்றத்தின் சார்பில் இவ்வருடம் தொடங்கிய முதியோர் கல்வி திட்டத்தை விவரித்தார். பிறகு ஆசிரியர்களிடம் வேலை நிறுத்த மனப்பான்மை வரக்கூடாது என்றும் கூடிய சீக்கிரத்தில் அவர்களின் கஷ்டத்தை நீக்க கவர்ன்மெண்டார் உதவி புரிவார்கள் என்றும் கூறினார்.

வந்தனோபசாரத்துடன் மகாநாடு முடிவடைந்தது.

---


# வெங்கட்ராமா அண்டு கம்பெனி

## பிரசுரகர்த்தர்கள் :: எஸ்பிளனேட், மதராஸ்

கீழ்க்கண்ட புத்தகங்கள் எல்லாம் சென்னை துரைத்தனத்தாரால் பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டவை.

1. தமிழ் சுடர் வாசகம் — I முதல் VIII வகுப்பு வரை — S. G. கணபதி அய்யர், B.O.L., Miss M. மாசிலாமணி அம்மையார் M.A., L.T.
2. ஆரம்ப கணிதம் — III முதல் V வகுப்பு வரை — M. சோமசுந்தரம், B.A., L.T.
3. இயற்கைப் பாடமும், தோட்ட வேலையும — IV & V வகுப்புகளுக்கு — S. V. தர்மராஜசிவா
4. இந்துதேச சரித்திரம் — IV முதல் V வகுப்பு வரை — P. சுப்பையா
5. இந்துதேச சரித்திரம் — VI முதல் VII வகுப்பு வரை — D. வெங்கிடராமன்
6. பாலர் கை வேலை — III முதல் V வகுப்பு வரை — D. K. நந்திகேசுவரன்
7. தமிழ் மொழிப் பயிற்சிகள் — III முதல் V வகுப்பு வரை
8. தமிழ் நீதி கதா வாசகம் — I முதல் V வகுப்பு வரை — P. K. ஸ்ரீனிவாஸாசாரியார்
9. ஆரம்ப ஆசிரியர் உதவி புத்தகங்கள் I முதல் V வகுப்பு வரை
10. தமிழ்ச் சிறுவர் இலக்கணம் — V வகுப்பு

இக் காகித பஞ்ச காலத்திலும் நாங்கள் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான அளவுக்கு எல்லா புத்தகங்களையும் தயாரித்து வைத்திருக்கிறோம். தங்களுக்குத் தேவையான புத்தகங்களை சப்ளை செய்ய தயாராக இருக்கிறோம். சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருப்பதற்காக தங்களுடைய ஆர்டரை முன் கூட்டியே அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# செய்தித் திரட்டு

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

30—3—44-ல் வருஷாந்திர, விளையாட்டுப் பந்தயங்களும், 5-4-44-ல் குருளையர் சங்கத்தின் வருஷாந்திர விழாவும், செஞ்சிலுவைச் சங்கத்தின் வருஷாந்திர விழாவும் ஸ்ரீ ராமநவமி தினத்தன்று விசேஷ பஜனையும் பூஜையும் நடைபெற்றன.

18—4—44-ல், உபாத்திமைச் சங்கத்தின் ஆண்டுவிழா, டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வெங்கடசுப்ரமணிய அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

29—4—44-ல், பாடசாலை 8-வது ஆண்டுவிழா ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு தலைமையில் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் ஓர் இனியக் கதம்பக்கச்சேரி நடத்தினர்.

## அக்பராபாட் ஸ்கூல், சென்னை

9—4—44-ல், மாணவ நாடகக் கழகத்தால் 'ஊர்வஸ்யனுராகம்' என்னும் நாடகமும், 'அசட்டு மாப்பிள்ளை' என்றகாமிக்கும் நடைபெற்றன.

18—4—44-ல், செஞ்சிலுவை சங்கத்தின் ஆண்டுவிழா ஸ்ரீ சுந்தரதாஸ் தலைமையிலும், 23-4-44-ல் பாடசாலையின் மூன்றாம் ஆண்டுவிழா ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ ராகவாச்சாரியார் தலைமையிலும், 29-4-44-ல் பாஷாஅபிவிருத்தி சங்கத்தின் மூன்றாம் ஆண்டுவிழா ஸ்ரீ சுந்தரதாஸ் தலைமையிலும் கொண்டாடப்பட்டன.

## D. R. முனிசிபல் ஆரம்ப பாடசாலை, மாம்பலம்

6—5—44-ல், வருஷாந்தர விழா, சைதாப்பேட்டை முனிசியல் கமிஷனர் ஸ்ரீ சிவக்கொழுந்து முதலியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. உதவி ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ சிங்காரவேலு முதலியார் 'பெற்றோர்களுக்கு ஒரு வார்த்தை' என்பதுபற்றிப் பேசினார் லேடி கேளன்வில்லர் ஸ்ரீமதி கமலம்மாள் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார். 'வள்ளி கல்யாணம்' என்னும் நாடகத்தை பையன்கள் திறம்பட நடித்துக் காட்டினர்.

10—5—44-ல், மாணவர் சங்க ஆண்டுவிழா ஸ்ரீமதி கமலம்மாள் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகளால், சம்பாஷணை, கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன.

## போர்டு ஆண்பெண் பாடசாலை, நாட்டறம்பள்ளி

23—4—44-ல், பெற்றோர் சங்க ஆண்டுவிழா, திரு. மாணிக்கவேலு நாயக்கர் தலைமையில் கொண்டாடப்பட்டது. திரு. முனிசுவாமி நாயுடு 'கிராம முன்னேற்றம்' என்பதுபற்றியும், திரு. பெருமாள் 'பெண் கல்வி' என்பதுபற்றியும் சொற்பொழிவு செய்தனர். ரூ. 70 மதிப்புள்ள பரிசுகள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டன.

## பஞ்சாயத்து போர்டு ஆசிரியர்கள் யூனியன், திருவண்ணுமலை

29—4—44-ல், ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயுடு தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. 1944-45-க்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பஞ்சாயத்து ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கிடைக்கும்படியும், பிரிவிலேஜ், சிக் லீவுகளுக்கு சர்க்கார் கிராண்டு பெறவும், பாடபுத்தகங்களை மாற்றவும், வெயிற்காலத்தில் ஒரு வேளை பாடசாலை நடத்தவும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

---

## புதுப்பேடு போர்டு பாடசாலை, மீஞ்சூர்

7—5—44-ல், பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஜம்புலிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம், மார்க்கண்டேய நாடகம் நடைபெற்றன.

---

## போர்டு ஆரம்ப பாடசாலை, மீஞ்சூர்

21—5—44-ல், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ ஷண்முகம் தலைமையில் வருஷாந்தர விழாவும் பெற்ரோர் சங்க ஆண்டுவிழாவும் கொண்டாடப்பட்டன. மாணவர்களால் சந்திரஹாஸன் நாடகம் நடைபெற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஜெம்புலிங்கமும், ஜூனியர் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வெங்கட்டராமனும் 'பெற்ரோர்களும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பும்' 'கோ-எடுகேஷன்' என்பனபற்றி சொற்பொழிவு செய்தனர்.

---

## போர்டு ஆண் பாடசாலை, அனந்தபுரம்

29—4—44 ல், வருஷாந்தரக் கொண்டாட்டம் டாக்டர் நரசிம்மய்யர் தலைமையில் நடைபெற்றது. மாணவ மாணவிகளால் 'ராஜ்யஸ்ரீ' என்ற நாடகமும், 'முட்டாள் வேலைக்காரன்' என்ற சம்பாஷணையும் 'அலெக்ஸாந்தரும் நாட்டாண்மைக்காரனும்' என்ற நியாய விசாரணையும் நடிக்கப்பட்டன. தலைவர் கல்வியின் அவசியத்தைப்பற்றியும் பெற்ரோர் ஊக்கங்கொள்ளவேண்டிய அவசியத்தைப் பற்றியும் சொற்பொழிவு செய்தார்.

---

## திருவள்ளூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

29—4—44-ல், இரண்டாவது மகாநாடு நடைபெற்றது. காலையில் ராயப்பேட்டை ஹோபார்ட்டு ஸ்கூல் சூப்ரிண்டெண்டெண்டு ஸ்ரீமதி சுவர்ணம்பாள் தலைமை வகித்து மகாநாட்டைத் திறந்துவைத்தார். மாலையில் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீ ஷண்முகம் தலைமை வகித்து பரிசுகள் வழங்கினர். மாகாணக் கல்வியதிகாரியின் உதவி ஸ்ரீ சாரங்கபாணி அய்யங்கார், ஏ. ஆர். பி. ஸ்கூல் பிரின்ஸ்பால் ஸ்ரீ ரகுநாதன், கிண்டி எம். எம். ஸ்கூல் மானேஜர் ரெவரெண்டு பால் ராமசேஷன், தென்னிந்திய ஆசிரியர் சங்க ஜர்னல் செக்ரிடரி ஸ்ரீ நடராஜன், வண்ணாரப்பேட்டை தியாகராய செட்டி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ சந்திரசேகர அய்யர் முதலானேர் சொற்பொழிவு செய்தனர். ஜில்லா கலெக்டர் ஸ்ரீ ரங்கநாதம்

தலைமையில் மாணவ மாணவிகளால் செஞ்சிலுவைச் சங்க நிதிக்காக நாடகம் நடத்தப்பட்டு சுமார் ரூ. 400 வசூலாயிற்று. மறுநாள் சுமார் 50 ஆசிரியர்கள் ரக்ததானம் வழங்கினர்.

## போர்டு பாடசாலை, அய்யப்பன் தாங்கல்

27—4—44-ல், இப்பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுடன் உல்லாசப் பிரயாணம் சென்று சென்னையிலுள்ள சரித்திர சம்பந்தமான பல இடங்களையும் பார்வையிட்டு வந்தனர்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், பூந்தமல்லி

17—4—44-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வைத்தியநாதன் தலைமையில் கூடிற்று. தேசிய முன்னணித் தலைவர் ஸ்ரீ நடராஜம் பிள்ளை யுத்தத்தைப்பற்றியும், ஆசிரியர்கள் எப்படி உதவிபுரியலாம் என்பது பற்றியும் பேசினார்.

## போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், பூனமல்லி

23—4—44-ல், ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ சீனிவாச நரசிம்மன் தலைமையில் கூடி, மாதச் சம்பளத்தை முதல் சனிக்கிழமை அல்லது 10 தேதியில் கொடுக்கும்படியும், பஞ்சப்படியை உயர்த்தும்படியும், க்ஷேமநிதி ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

## போர்டு பிரதம பாடசாலை, ஸ்ரீபெரும்புத்தூர்

15—5—44-ல், டிப்டி கலெக்டர் ஸ்ரீ ஆனந்தம் தலைமையில், பெற்றோர் சங்கமும், மாணவர் சங்க ஆண்டுவிழாவும் நடைபெற்றன. 'பெற்றோர்களும் ஆசிரியர்களும்' என்பதுபற்றி டிப்டி இன்ஸ்பெக்டர் சொற்பொழிவு செய்தார். மாணவ மாணவிகள் சொல்லாடல், கும்மி முதலியன நடித்தனர். தலைவர் உரையில் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் குறைவாய் இருப்பதாயும், அதை அதிகரிக்கவேண்டிய பிரயத்தனங்களை அதிகாரிகள் செய்யும்படியும் சொன்னார்.

## இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

30—4—44-ல் பல பிரமுகர்களுக்குப் பாராட்டு விருந்து நடைபெற்றது.

5—5—44-ல் தமிழ்ப் புலவர் மகாநாடு நடைபெற்றது. அப்போது பல பிரமுகர்கள் ஏராளமான நன்கொடை யளித்தனர்.

இப் பாடசாலையில் எட்டாவது வகுப்புவரை இருக்கிறது. கல்வியறிவோடு சமய அறிவும் தொழில் முறைகளும் போதிக்கப்படுகின்றன. உடற்பயிற்சியும் ஒழுக்க முறைகளும் தனிமையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

### ஸெயின்ட் மோரீஸ் உயர்தர ஆரம்ப பாடசாலை, கொளப்பலூர்

19—4—44-ல் ஆண்டு விழாவும், பெற்றோர் சங்கமும், சிற்றலங் காரன் என்ற நாடகமும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோவிந்தமேனன் தலைமையில் நடைபெற்றன. மானேஜர் ரெவரெண்டு அருள்சாமி ஆசிரியர் கஷ்டங்களைப்பற்றியும் பாடசாலையின் முன்னேற்றத்தையும் உத்தேசித்தும் சொற்பொழிவு செய்தார். தலைவர், கல்வி, பெற்றோர் கடமை, சுகாதாரம் என்பன பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

### கோயமுத்தூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

30—4—44-ல் மத்திய சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் தலைமையில், நான்காவது மகாநாடு நடைபெற்றது. டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ரங்கநாதன் திறப்பு விழாவை நடத்தினார். ஸ்ரீ சற்குணம் 'வருங்காலக் கல்வித் திட்டம்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். பின்பு, சம்பளம் அலவன்ஸ் முதலியனபற்றி பல தீர்மானங்கள் நிறைவேறின.

---

### பல்லடம் தாலூகா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

10—6—44-ல் சூலூர் ஷண்முகதேவி டாக்கீஸில் நடைபெறும். திரு. கே. எம். பாலசுப்ரமணியம், (மாகாண பாட்டு பிரசாரகர்) தலைமை வகிக்க இசைந்துள்ளார். ஆசிரியர் சங்கங்களிலிருந்து அனேக பிரதிநிதிகள் வந்து ஆதரவளிக்க வேண்டுகிறோம்.


**இந்தியன் பப்ளிஷிங் ஹௌஸ், லிமிடெட்**

14, சுங்குராமச் செட்டி வீதி :: ஜி. டி., சென்னை

ஆரம்பப் பள்ளிக்கூட முதல் முதலாக எட்டாம்
வகுப்புக்கள் வரை உபயோகிக்கப்பட்டு
ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள

# பாரத மாதா வாசகங்கள்

1, 2, 3, 4, 5, 6, 7 & 8 வகுப்புகளுக்கு முறையே
4, 5, 6, 9, 10, 10, 10½ & 12 அணா விலையுள்ளவை

★

டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸர் C. இரகுநாதன், B.A., L.T., T. D. (London)
இயற்றியவை

## போர்டு ஆரம்ப பாடசாலை, பாலப்பட்டி

30—4—44-ல் பாடசாலை தினமும் பெற்றோர் சங்கமும், நாமக்கல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஆராவமுதீ அய்யங்கார் தலைமையில் கொண்டாடப்பட்டன. பல பிரமுகர்கள் விஜயம் செய்தனர். ஸ்ரீ ராமதுரை அய்யரும் ஸ்ரீ தங்கராஜ—ும் சொற்பொழிவு செய்தனர். மாணவ மாணவிகள் விளையாட்டுப் பந்தயங்கள் நடைபெற்றன.

---

## ஓமலூர் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

1—5—44-ல் சேலம் முனிசிபல் கல்லூரித் தலைவர் திரு. ராமசாமி கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. சேலம் ஸ்பெஷல் டெவலெப்மெண்ட் ஆபீஸர் மகாநாட்டைத் திறந்து வைத்தார். யூனியன் தலைவர் ஸ்ரீ ஷண்முகம் பிள்ளை எல்லாரையும் வரவேற்றுப் பேசினர். தலைவர் உரையில் ஆரம்ப ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சரிவர செய்ய வேண்டுமாயின் அவர்களுடைய சம்பள உயர்வை மற்ற சிப்பந்திகளைப் போல் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கூறினர். சம்பள உயர்வு, போதனுமுறைப் பயிற்சி முதலிய விஷயங்களைப் பற்றி பல தீர்மானங்கள் நிறைவேறின.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, திருக்காட்டுப்பள்ளி

7—5—44-ல் பெற்றோர் சங்க ஆண்டுவிழா, ஜில்லா போர்டு கல்வி யதிகாரி ஸ்ரீ ரெங்கரத்தின சாஸ்திரியார் தலைமையில் கொண்டாடப்பட்டது மாணவ மாணவிகளால் சொல்லாடல் அபிநயம் முதலியவை நடைபெற்றன. தேர்ச்சிபெற்ற மாணவ மாணவிகளுக்கு தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவர் ஆசிரியர்களின் திறமையையும், ஒற்றுமையையும் பாராட்டி கல்வியின் அவசியம், பெற்றோர் கடமை என்ற விஷயங்களைப் பற்றி விரிவாகப் பேசினர்.

---

## போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், அம்மையப்பன்

8—5—44-ல் பேரளத்தில் ஓர் சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. சார்ஜெண்டு திட்டம் விரிவாக விவாதிக்கப்பட்டது. பஞ்சப்படி, ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசப்படிப்பு வசதி முதலியனபற்றித் தீர்மானங்கள் நிறைவேறின.

---

## பஞ்சாயத்து போர்டு பாடசாலை, பழமார்நேரி

29—4—44-ல் மாணவ மாணவிகள் சங்க ஆண்டு விழா ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ உமாகாந்தம் தலைமையில் கொண்டாடப்பட்டது. கும்மி, கோலாட்டம், சொல்லாடல், பக்த நந்தனர் சரித்திரம் திரை, உடை முதலியவைகளுடன் திறமையாய் நடைபெற்றன. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ துரைசாமி முதலியார் 'மாணவ மாவிகள் மாண்புறுவது எவ்விதம்?' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

30—4—44-ல் பெற்றோர் சங்க ஆண்டு விழா, திருக்காட்டுப்பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீபாலசுப்ரமணிய அய்யர் தலைமையில்கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டம், நடனம்,

'கிருஷ்ண பாரிஜாதம்' என்ற நாடகத்தையும் திறமையுடன் நடித்தனர். மாயவரம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கலியாண சுந்தரம் பிள்ளை 'பெற்றோர்களின் கடமை, பாடசாலை அபிவிருத்தி, பெற்றோர்களும் உபாத்தியாயர்களும்' என்ற விஷயங்கள் பற்றி சொற்பொழிவுசெய்தார்.

## ஆரம்ப பாடசாலை, ஸ்ரீ வாஞ்சியம்

28—4—44-ல் யுத்த விஷய சம்பந்தமாய் கூட்டம் கூடிற்று. நாகப்பட்டணம் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் தலைமை வகித்தார். மாணவர்கள் யுத்த சேவை எவ்வாறு புரியக்கூடும் என்பதுபற்றி நன்னிலம் ஆசிரியர் ஸ்ரீ புருஷோத்தம பிள்ளை சொற்பொழிவு செய்தார்.

## ஆசிரியர் சங்கம், அதிராம பட்டணம்

6—5—44-ல் ஆண்டு விழா, டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சுப்ரமணிய அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. பட்டுக்கோட்டை தமிழ் பண்டிதர் ஸ்ரீ ராஜகோபால முதலியார் 'அறிவும் ஒழுக்கமும்' என்பது பற்றிப் பேசினார்.

## ஸ்ரீராமா பாடசாலை, கும்பகோணம்

24—5—44 ல் ஆசிரியர்கள் கூடி, இப் பாடசாலையை ஸ்தாபிதம் செய்தவரான, திவான் பகதூர் ராமாநுஜாச்சாரியார் 93-வது வயதில் மறைந்தது பற்றி ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றி அவர் குடும்பத்தினருக்கு அனுப்பினர்.

## செல்லம் உயர்தர ஆரம்பப்பள்ளி, உரத்தூர்

21—6—44 ல் இப்பள்ளியின் வெள்ளி விழா ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரிகள் தலைமையிலும், பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா, லேபர் ஆபீஸர் ஸ்ரீ தாமஸ் பாக்கியம் தலைமையிலும் நடைபெறும்.

## திருச்செந்தூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

29—4—44-ல் காலாண்டுக் கூட்டம், ஸ்ரீ கணேசய்யர் தலைமையில் கூடிற்று. அப்பொழுது, கிராண்டு விகிதம் அதிகப்படுத்தல், எட்டாவது வகுப்பு பரீட்சை விடைத் தாள்களை உயர்தர ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு திருத்துதல் பாடசாலை நாட்களைக் குறைத்தல் முதலியனபற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சோமசுந்தர வித்யாசாலை, நேமத்தான்பட்டி

30—4—44-ல் 12-வது ஆண்டு விழா, தேவகோட்டை திரு. சாமிநாதன் செட்டியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது கொப்பனாபட்டி ஆசிரியை திரு. இன்பவல்லி 'பொருளும் புகழும்' என்பது பற்றியும், சரித்திர ஆசிரியர் திரு. சுப்பிரமணிய அய்யர் 'தமிழும் அதன் பெருமையும்,' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். இரவில் மாணவர்கள் 'வீர அபிமன்யு' என்ற நாடகத்தை நடித்துக் காட்டினர்.

### T. D. T. A. உயர்தர ஆரம்ப பாடசாலை, ஆழ்வார் திருநகரி

10—5—44-ல் தாலூகா கல்வி ஆலோசனையாளரான திரு. ஜான் அருளானந்தம் தலைமையில் பெற்றோர் சங்க விழா கொண்டாடப் பட்டது.

### சொக்கலிங்க வித்யாசாலை, லெட்சுமிபுரம்

20—5—44-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமசுவாமி அய்யர் தலைமையில் பரிசளிப்பு விழா கொண்டாடப்பட்டது. மாணவ மாணவி கள் பேச்சு, நடிப்பு, கும்மி முதலியன நடத்தினர். வெற்றி பெற்றோர்க் குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ் பண்டிட் ஸ்ரீ முத்து வெங்கடா சலம் அய்யர் 'இளமையும் புலமையும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், தாத்தையங்கார்பேட்டை

29—4—44-ல் மாதாந்திரக் கூட்டம், உதவி ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ வீராசாமி பத்தர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் 'ஆசிரியர்களும் யுத்த சேவையும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். யுத்த சேவை செய்யும் சிப்பாய்களுக்கு சுமார் 100 இனிய புத்தகங்கள் வழங்கப்பட்டன.

### முனிசிபல் ஆரம்ப பாடசாலை, திருமாநிலையூர்

29—4—44-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ வைத்தியநாதசாமி அய்யர் தலைமையில், பெற்றோர் சங்க 5-வது ஆண்டுவிழா கொண்டாடப் பட்டது. டாக்டர் செல்லய்யராவ் 'பள்ளிக்கூடங்களும் சுகாதாரமும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். தலைவர் பெற்றோர் ஒத்துழைப் பைப் பற்றிப் பேசினர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ அருணாசலம் பிள்ளை 'பெற்றோர் கடமை' என்பதுபற்றிப் பேசினர்.

### போர்டு இந்து ஆண் பெண் பாடசாலைகள், ஆலத்துடையான்பட்டி

27—4—44-ல் திரு. சிவசங்கர ரெட்டியார் தலைமையில் மாணவ மாணவிகளுக்குப் பந்தய விளையாட்டுகள் நடைபெற்றன.

28—4—44-ல் திரு. வீராசாமி பத்தர் தலைமையில் பெற்றோர் சங்க ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோதண்டராமய்யர் சங்கத்தைத் திறந்து வைத்தார். துறையூர் ஜமீன்தார் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ சுப்பு ரெட்டியார் 'தற்கால கல்வி நிலை' என்பது பற்றிப் பேசினர். மேட்டுப்பாளையம் தமிழ் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரராஜ ரெட்டியார் 'பாரத நீதியும் மக்கள் கடமை யும்' என்பதுபற்றிப் பேசினர். தலைமை ஆசிரியர் அம்பலவா ணய்யர் 'பெற்றோருக்கு ஒரு வார்த்தை' என்பதுபற்றிப் பேசினர். இரவில் 'விகடகவி இராமாநந்தர்' என்ற நாடகம் மாணவ மாணவிக ளால் நடிக்கப்பட்டது.

## DESCRIPTIVE GEOGRAPHY

*FOR CLASSES IV & V*

By N. SUBRAHMANYAM, M.A., L.T. P.N.G.S., &
K. RAMAMOORTHY, M.A. L.T.,

(*Written in accordance with the recent Syllabus*) **Tamil & Telugu Editions**

**Price : IV Class 0 10 0 V Class 0 10 6**

---

## STORIES FROM INDIAN HISTORY

*FOR CLASSES IV & V*

By S. THIRUVENKATACHARI, M.A., L.T. TAMIL

**Price IV Class 0 6 6 V Class 0 8 0**

---

## A TEXT BOOK OF INDIAN HISTORY

(FOR MIDDLE SCHOOLS & HIGHER ELEMENTARY SCHOOLS)

By Rao Bahadur, C. S. SRINIVASACHARI, M.A.,

**TAMIL & TELUGU EDITIONS**

**Price : Book I As. 8, Book II As. 11 Book III As. 11**

## P. VARADACHARY & Co.

Publishers & Book-Sellers, LINGHI CHETTY ST., MADRAS



## நமது தாய் நாடு

ஆலயத்தைச் சுற்றி அங்கப் பிரதக்ஷணம் செய்யும் பக்தர் போன்று ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் பாரதத் தாயின் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அலைந்து திரிந்தார். அன்னையின் உடலிலும் உறுப்புக்களிலும் எங்கெங்கு என்ன கோளாறு உள்ளது என்று கண்டு கண்ணீர் உகுத்தார். பின்னர் அன்னையின் சோர்வை நீக்கி அவள் வலிமைபெற்று எழும்படி ஆசீர்வதித்தார். இந்த ஆசி மணிமொழிகள் நிறைந்தது இந்நூல்.

இரண்டாம் பதிப்பு. அழகிய வடிவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0

★

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர் : : சென்னை

# பத்திராதிபர் குறிப்புகள்

## மாகாணக் கல்வி மகாநாடு

அண்ணாமலை நகரில் நடந்த மாகாணக் கல்வி மகாநாட்டில் மத்திய கல்வி ஆலோசனைக் கமிட்டியின் கல்விப் புனரமைப்புத் திட்டம் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. மகாநாட்டுக்குத் தலைமைவகித்த ஸ்ரீமான் கோபாலஸ்வாமி அய்யங்கார் இத் திட்டத்திலுள்ள சில முக்கிய அம்சங்களை எடுத்துக் காட்டி இத் திட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய அவசியத்தையும் விளக்கினார். வர்தா கல்வி திட்டத்தின் நலனை அனுபவத்தில் அவர் அறிந்துள்ளபடியால் கட்டாயக்கல்வி, வர்தா போதனா முறையில் ஜாதிமத வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் 6 வயது முதல் 14 வயது வரையில் இலவசமாக அளிக்கப்படவேண்டிய அவசியத்தை அவர் தெளிவுறக் கூறினார். 11-ம் வயதில் தேர்ச்சிபெற்றவர்களை உயர்தரப் படிப்புக்கு மாற்றுவதின் நலனை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்தது குறிப்பிடத்தக்கது. முன்னேற்றமுள்ள நாடுகளிலே 16 வயது வரையில் மாணவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட முயற்சித்து வருகின்றார்கள். அமெரிக்காவில் தவிர மற்ற எல்லா நாடுகளிலும் 11-ம் வயதில் உயர்தரப் பள்ளிக்கூடங்களுக்கு தேர்ச்சியுள்ள மாணவர்களை பிரிக்கும் திட்டமேயுள்ளது. உயர்தரக் கல்வியின் நோக்கம் ஆரம்பக் கல்வியின் நோக்கத்திற்கு வித்தியாசப்பட்டுள்ளதினாலும், பணச் சிலவைக் குறிப்பிட்டும் 11-ம் வயதில் பிரிப்பது நலம் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். அமெரிக்காவிலும்கூட ஜூனியர் ஹைஸ்கூல்கள் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. ஆரம்பக் கல்வியினின்று மேற்படிப்புக்கு யோக்கியதையுள்ள மாணவர்கள் இந்த ஜூனியர் ஹைஸ்கூல்களுக்குப் போகும்படி தூண்டப்படுகிறார்கள்.

இப்படி மாற்றுவது நலமா அல்லவா என்பது விவாதத்தினால் தெளிவாகாது. இதுபோல மத்திய கல்வி ஆலோசனை போர்டாரின் திட்டத்தில் இன்னும் சில விஷயங்கள் இருக்கின்றன. இவைகளைப்பற்றி தனித்தனியாக விவாதித்தும், திட்டத்தைக் குறை கூறிக்கொண்டும் இருந்தால் காலதாமதம் தான் ஏற்படும். மனிதனால் ஏற்படுத்தப்படும் எந்த திட்டமும் பரிபூர்ணமாயிருக்காது. அதிலும் கல்வி திட்டத்தை எல்லா காலத்துக்கும் மாற்றக்கூடாத வண்ணம் தயாரிப்பது முடியாது. தயாரிப்பதும் தவறாகும். சமூக நிலை; ராஜ்ய நிலை; பொருளாதர நிலை; இவைகளால் கல்வி திட்டம் அப்பப்பொழுது மாற்றப்பட வேண்டியிருக்கும். அனுபவத்திலும் மாறுதல்கள் பல செய்யவேண்டியிருக்கும். எனவே, நாட்டின் முன்னேற்றத்தை உத்தேசித்து, ஸ்ரீமான்கள் கோபாலஸ்வாமி அய்யங்காரும், ரத்தினசாமியும் கூறியவாறு, இச் சார்ஜண்டு திட்டத்தை புனரமைப்புத் திட்டமாகக் கருதாமல் உடனே அமுலுக்குக் கொண்டு வரும்படி நமது துரைத்தனத்தாரை வற்புறுத்த வேண்டும். பொது மக்களுக்கு நமது நாட்டின் கேவலமான கல்வி நிலையை எடுத்துக்காட்டி அவர்களிடையே கல்வி அபிவிருத்திக்கான ஆர்வத்தை எழுப்பவேண்டும். நாட்டுத் தலைவர்களும், ஆசிரியர்களுமே இத் தொண்டைச் செய்யவேண்டும்.

## ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம்

கல்வி மகாநாடுகளில் ஆசிரியர்களின் சம்பளம் வேலை நிபந்தனைகள் இவைகளைப்பற்றி குறை கூறுவதே வழக்கம் என்று பலர் சொல்வ

துண்டு. நடந்த மகாநாட்டில் அது விஷயமாக ஒரு தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. அதைப்பற்றி பேசுவதற்கும் 10 நிமிடங்களோ செலவழிக்கப்பட்டன. ஆயினும் ஆசிரியர்களின் குறைவான சம்பளமும் கேவலமான வேலை நிபந்தனைகளும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். எல்லோரும் இவ்விஷயத்தை கவர்ன்மெண்டு கவனித்து தக்க சீர்திருத்தங்கள் செய்வது அவசியம் என்று சொல்லுகிறார்கள். இப்படியிருக்க சார்ஜண்டு திட்டத்தில் ஆசிரியர்களுக்காக வரைந்துள்ள சம்பளம் தாராளமானது என்று பலர் சொல்லி வருகிறார்கள். சார்ஜண்டு திட்டத்தின்படியுள்ள ஆரம்பச் சம்பளத்தையும், உயர்ந்த சம்பளத்தையும் சிறிது அளவு குறைப்பதால் மொத்தச் செலவைக் குறைக்கக்கூடும் என்று சிலர் கருதுகிறார்கள். இன்னும் சிலர் ஆசிரியர்கள் சார்ஜண்டு திட்டத்தை வரவேற்பதின் காரணம் இந்த தாராள சம்பள திட்டமே என்றும் கூறுகிறார்கள். இந்த தாராள திட்டம் என்ன என்று கவனிப்போம். மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறியபின் இரண்டு வருஷம் போதனை முறை தேர்ச்சி பெற்றபின் ரூ. 30-ல் ஆரம்பித்து வருஷத்துக்கு ரூபாய் 1 வீதம் ரூ. 50-க்கு அதிகரிக்கப்படுவதேயாகும். மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறிய குமாஸ்தாக்களுக்கு ஆரம்ப சம்பளம் தற்காலத்திலேயே ரூ. 35 ஆகின்றது. பயிற்சியும் பெற்றபின் ஆசிரியருக்கு ரூ. 30 தான் இதைத் தான் தாராள திட்டம் என்றும், இதில் குறைக்கலாம் என்றும் பலர் சொல்லி வருகின்றார்கள். ஆசிரியர்கள் பிறர் கையை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. ஆசிரியர்களின் பயிற்சிக்கும் அவர்கள் செய்யும் தொண்டுக்கும் ஏற்றவாறு சம்பள விகிதம் ஏற்படுத்தும்படி துரைத்தனத்தாரையும் நாட்டுத் தலைவர்களையும் வற்புறுத்தவேண்டும். ஆசிரியர் சங்கங்களின் மூலம் இந்தப் பிரசாரம்செய்து வரவேண்டியது மிகவும் அவசியம்.

---

## பூசாரி வரம் கோடுக்கவில்லையே!

ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்யும் 'ஆசிரியர்கள் உட்பட' எல்லா சிப்பந்திகளுக்கும், கவர்ன்மெண்டு திட்டப்படி யுத்த அலவன்ஸ் (Dearness allowance) கொடுக்கப்படவேண்டுமென்று துரைத்தனத்தார் உத்திரவிட்ட பிறகும் அநேக ஸ்தல ஸ்தாபனங்களில் இந்தப் பஞ்சப் படியை (Dearness allowance) இன்னும் கவர்ன்மெண்டு திட்டப்படி கொடுக்கவில்லையென்று நாம் அறிகிறோம். சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லையே என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. விலை ஏறுவதைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. ஆசிரியர்களின் குறைந்த சம்பளம் அவர்களின் ஜீவனத்துக்குப் போதுவதில்லை. இந்த அலவன்ஸை சீக்கிரத்தில் கொடுத்தால் அவர்களுக்கு அது பேருதவியாயிருக்கும். எனவே கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி எல்லா ஸ்தல ஸ்தாபனங்களையும் உடனே இந்த அலவன்ஸை அவர்கள் உத்திரவுப்படி கொடுக்குமாறு வற்புறுத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். தவிர, ஆசிரியர் சங்கங்களின் காரியதரிசிகள் ஆங்காங்குள்ள ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடங்களில் எவ்வளவு அளவில் இந்த அலவன்ஸ் அளிக்கப்படுகிறது என்பதை தென் இந்திய ஆசிரியர் சங்க காரியதரிசிக்குத் தெரியப்படுத்துவார்களானால், துரைத்தனத்தாருக்கு சரியானபடி விண்ணப்பித்துக்கொள்ள சாதகமாயிருக்கும்.

---

## S. I. T. U. PROTECTION FUND, LTD.,

520, High Road, Triplicane, Madras.

# ஒவ்வொரு

# உபாத்தியாயரும்

# சேர வேண்டிய நிதி

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,90,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,620 |
| யூனிட்டுகள் | ... | ... | 3,125 |

★

**ரூபாய்க்கு 2 அணு விதம் போனஸ்**

கொடுக்கப்பட்டிருக்கிறது

★

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

Regd. No. M. 3473





யுத்த டீ :— "டே ... ஸ்டார்" பத்திரிகையின் சிறந்த எழுத்தாளரான
மாட ஹாட்டன் ... கைட்ஸ்பாரிட்ஜ் சண்டையின்போது லிபியாவுக்கு வந்து
சேர்ந்தார். வந்தவுடனே போர்முனைக்குச் சென்றார். அங்கு நடந்ததை விவரித்து
தனது பத்திரிகைக்கு கட்டுரைகளை அனுப்ப ஆரம்பித்தார். முதல் முதலாக
அனுப்பிய கட்டுரைகளில் ஒன்று இவ்வாறு தொடங்குகிறது: "டாங்கி ...
நிழலில் உட்கார்ந்துகொண்டு, டாங்கியிலுள்ளவர்கள் டீ தயாரி ...
கிறார்கள். சண்டை எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் ...
இங்கிலீஷ் சிப்பாய்கள் மட்டும் டீ தயாரிப்பதை நிறுத்தமாட்டார்கள். டீ
அருந்தியவுடன், உக்கிரமாகப் போரிட புறப்பட்டு விடுகிறார்கள்."



ஒவ்வொரு போர் முனையிலிருந்தும்—எந்தெந்த இடத்தில்
மனுஷ்யனின் தைரியம், பொறுமை இவைகளின் விசேஷத்தை
அவசரமாகக்கோருகிறதோ—அவ்விடமிருந்தெல்லாம் ஐக்கிய
நாடுகளின் போர் வீரர்களுக்கு டீ அளிக்கும் விசேஷ குணங்
களைப்பற்றிய செய்திகள் வருகின்றன. யுத்தத்திலும் சரி,
சமாதானகாலங்களிலும் சரி, டீ நிகரற்ற கெடுதல் இல்லாத
சௌகரியமளிக்கும் பானம் என்பதை நிரூபிக்கிறது.

கடினமான காலங்களில்

# இந்தியன் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 222


Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St. Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers Union." 520, High Road, Triplicane Madras